**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 34 / 2024**

**வா.சா.1 – சபரிமணி** **09.04.2025**

**குறுக்கு விசாரணை :–**

பிரதிவாதி எனது அப்பா காலத்திலிருந்தே எங்கள் குடும்ப நண்பர் ஆவார். பிரதிவாதி மாதம் மாதம் எனக்கு வட்டி செலுத்தி வந்ததாகவும் அதற்கு நான் கோடு போட்ட நோட்டில் வரவு வைத்து கொடுத்ததாகவும் பிராது பத்தி 4ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கோடுபோட்ட நோட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த நோட்டு பிரதிவாதி வசம் உள்ளது. பிரதிவாதி என் மீதும் எனது கணவர் மீதும் கூடுதல் வட்டி கேட்டதாக பூவந்தி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் பிரதிவாதி மீது திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம் என்றால் நான் கொடுக்கவில்லை எனது கணவர் புகார் கொடுத்தார். பிரதிவாதி பூவந்தி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததை வழக்கிற்காக மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. லாடனேந்தல் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பெரியணன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். பிரதிவாதிக்கும் எங்களுக்கும் இடையேயான கொடுக்கல் வாங்கல் பிரச்சனையை பொறுத்து பொியணன் முன்னிலையில் ஒரு பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கையொப்பம் மட்டும் தான் போடத்தெரியும் எழுதப்படிக்க தெரியாது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ஈட்டுக்கடன் பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும். மேற்படி வா.சாஆ.2 ஆவணத்தில் சசிக்குமார் மற்றும் வேல்முருகன் ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். வா.சா.ஆ.3 ஈட்டுக்கடன் பத்திரத்தில் சசிக்குமார் மற்றும் நாராயணமூர்த்தி ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். அதிகப்படியான வட்டிக்காக வா.சா.ஆ.3 ஈட்டுக்கடன் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் மீதும் எனது கணவர் மீதும் அதிக வட்டி வாங்கியதாக

மதுரை காவல் நிலையத்தில் புகார் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரிலுள்ள கிரைய ஆவணத்தை எந்த தேதியில் என்னிடம் கொடுத்தார் என்றால் 03.08.2016 அன்று கொடுத்தார். நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் அதனால் தான் நான் பிரதிவாதியின் பத்திரத்தை வாங்கி வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் அசல் ஆவணத்தை வைத்துக்கொண்டு நான் கூடுதல் வட்டி கேட்டு பிரதிவாதியை மிரட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடனாக பெற்றது ரூ.150000/– மட்டும் தான் என்றால் சரியல்ல. மேற்படி ரூ.150000/– க்கு இன்று வரை பிரதிவாதி 1% வட்டியுடன் செலுத்த தயாராக உள்ளார் என்றால் அதை வாங்கிக்கொள்ள நான் தயாராக உள்ளேனா என்றால் தயார் இல்லை பிரதிவாதி எனக்கு 2% வட்டியுடன் அசலை திரும்ப தரவேண்டும். நான் வசிக்கும் பகுதியில் குடும்ப பெண்களிடம் மாதச்சீட்டு பிடிக்கும் பழக்கம் எனக்கு உண்டு என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மாமியாரை மிரட்டி அவரது மாதச்சீட்டில் உள்ள தொகையை தாவா கடனுக்கான வட்டிக்கு ஈடு செய்ததால் என் மீது திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு முறையான உரிமம் இல்லாமல் நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

**மானாமதுரை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை